


**12. 11. 2025**

## தலைப்புச் செய்திகள்

**1.** இந்தியா - பூடான் நாடுகளுக்கிடையே எரிசக்தி, வர்த்தகம் தொழில்நுட்பம், உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

**2.** மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் பட்ஜெட்டிற்கு முந்தைய 3-ஆவது கட்ட ஆலோசனை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

**3.** தமிழகத்திலிருந்து இந்தாண்டு மத்திய பணியாளர் தேர்வாணைய முதன்மை தேர்வில் 155 பேர் வெற்றிபெற்றுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

**4.** ராமநாதபுரம் தென்காசி தூத்துக்குடி திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5** Kumamoto Masters பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு லக்ஷ்யா சென் முன்னேறியுள்ளார்.

## இனி விரிவான செய்திகள்

**************

**பிரதமர்**

இந்தியா - பூடான் நாடுகளுக்கிடையே எரிசக்தி, வர்த்தகம் தொழில்நுட்பம், உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர், தமது பூடான் பயணத்தின் ஒருபகுதியாக தலைநகர் திம்புவில் அந்நாட்டு மன்னர் ஜிக்மே கேசர் வாங்சுக்குடன் இணைந்து காலசக்கர ஆளுமை தியான நிகழ்வில் பங்கேற்றது குறித்து தமது சமூகவலைதள பதிவில் மகிழ்ச்சி வெளியிட்டார்.

இந்தியாவின் கிழக்கு சார் கொள்கைக்கு ஏற்புடையதாக திகழும் அந்நாட்டின் நகர்புற திட்டத்தின் முன்னேற்றங்களையும் பிரதமர் வெகுவாக பாராட்டினார்.

இந்திய பூடான் இடையே பல ஆண்டுகளாக தொடர்ந்து நீடிக்கும் நட்புறவை முன்னெடுத்து செல்லும் பூடான் மூத்த அரசரின் விரிவான முயற்சிகளை சுட்டிக்காட்டினார்.

முன்னதாக பிரதமர் பூடான் பிரதமர் ஷெரிங் டாப்கேயுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

புதுப்பிக்கதக்க எரிசக்தி, மன நலம், சுகாதாரம் உள்ளிட்ட பிரிவுகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

*************

**நிர்மலா**

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் பட்ஜெட்டிற்கு முந்தைய 3 ஆவது கட்ட ஆலோசனை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனத்தினர் இதில் பங்கேற்றனர்.

2026-27ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது.

மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.பங்கஜ் சவுத்ரி

பொருளாதார விவகாரங்களுக்கான செயலர்

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவன அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

முன்னதாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதற்கட்ட பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டத்தில் பொருளாதார நிபுணர்கள் மற்றும் இரண்டாவது கட்ட கூட்டத்தில் வேளாண் வல்லுநர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகளுடன் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து விவாதங்கள் இடம்பெற்றன.

*************

**ஜெய்சங்கர்**

கனடாவில் நடைபெறும் ஜி-7 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் ஒருபகுதியாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்துடன் இன்று பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

2025-ஆம் ஆண்டு புதிய செயல் திட்டத்திற்கான முன்னேற்றங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

கனடா உடனான இருதரப்பு ஒத்துழைப்பை மறுகட்டமைப்பது குறித்து இந்தியா ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக டாக்டர் ஜெய்சங்கர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கூட்டத்தின் ஒருபகுதியாக டாக்டர் ஜெய்சங்கர் மெக்சிகோ வெளியுறவு அமைச்சர் டாக்டர் **JUWAN RAMAN DE** உடன் வணிகம்

வர்த்தகம் சுகாதாரம் மருந்தியல், அறிவியல் தொழில்நுட்ப துறைகளில் ஒத்துழைப்பு குறித்தும் கலந்தாலோசித்தார்.

.ஃபிரான்ஸ் வெளியுறவு அமைச்சருடன் அரசியல் ரீதியலான நட்புறவை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொண்டார்.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சருடன் **இந்தியா பிரிட்டன் தொலைநோக்கு பார்வை 2035** தொடர்பான முக்கிய அம்சங்கள் குறித்தும் அவர் விவாதித்தார்.

பிரேசில் மற்றும் ஜெர்மன் நாட்டு வெளியுறவு அமைச்சர்களையும் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

*************

**உபேந்திரா திவேதி**

நவீன தொழில்நுட்பங்கள் மேம்பாட்டின் அவசியத்தை ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திரா திவேதி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு சார்ந்த பேச்சுவார்த்தைகள் நிகழ்வில் இன்று உரையாற்றிய அவர், நவீன தளவாடங்கள் மக்கள் தொகை அடிப்படையில் செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தற்போதுள்ள போர் முறைகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் இன்றியமையா பங்கை அவர் சுட்டிக்காட்டினார்.

மனிதர்களை மையமாக கொண்ட நவீன தொழில்நுட்பங்களை ராணுவம் ஆராய்ந்து வருவதாகவும், அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்திற்கான நுண் தகடுகள் பயன்பாடு பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ், சைபர் கருவிகளை போர் தளங்களில் பயன்படுத்துவதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

மனிதர்களுக்கு மாற்றாக அல்லாமல் உதவுவதற்காகவே நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு இருக்க வேண்டும் என்றார்.

ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட **சாம்பவ் செயலி**, அடுத்த கட்ட நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் ஜென்ரல் உபேந்திரா குறிப்பிட்டார்.

*************

**முதலமைச்சர்**

ஃபிரான்ஸ் நாட்டின் உயரிய அங்கீகார செவாலியர் விருது, கலை இயக்குனர் தோட்டா தரணிக்கு அறிவிக்கப்பட்டமைக்காக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இவ்விருதுபெற்ற மிகப்பெரும் ஆளுமைகளின் வரிசைகளில் தோட்டா தரணி இணைய உள்ளது பெருமை அளிப்பதாக முதலமைச்சர் புகழாரம் சூட்டியுள்ளார்.

*************

**உதயநிதி**

தமிழகத்திலிருந்து இந்தாண்டு UPSC முதன்மை தேர்வு எழுதியவர்களில் 155 பேர் வெற்றிபெற்றுள்ளதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசு பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்ற 87 பேர் இத்தேர்வில் வெற்றிபெற்றுள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

ஆண்டுதோறும் 100 குடிமை பணி அதிகாரிகளை உருவாக்குவதை இலக்காக கொண்டு நான் முதல்வன் திட்டம் முன்னெடுத்துச்செல்லப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

*************

**எ.வ.வேலு**

மதுரை மாவட்டம் கோரிப்பாளையத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மேம்பால கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு இன்று ஆய்வு செய்தார்.

150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெறும் இதர மேம்பால பணிகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

*************

**சேகர்பாபு**

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை மூலகொத்தளம் ஒருங்கிணைந்த வளாகம் புதிய சமுதாய நலக்கூட கட்டுமான பணிகளை சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும தலைவர் திரு.சேகர்பாபு இன்று நேரில் ஆய்வு செய்தார்.

இப்பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

*************

**வாக்காளர் பட்டியல்**

நெல்லை மாவட்டத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த படிவங்கள் 90 சதவிகிதம் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

**திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற** தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்களை வழங்கிடும் பணிகளை ஆட்சித்தலைவர் திரு.சரவணன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையான நடைமுறைகள் குறித்து அவர் அலுவலர்களிடம் எடுத்துரைத்தார்.

*************

**சேலம்**

சேலம் மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மத்திய அரசின் உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

*************

**நிமோனியா**

உலக நிமோனியா தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

நிமோனியா தாக்குதலில் இருந்து அனைத்து குழந்தைகளையும் பாதுகாக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய சுகாதார குடும்நலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

இதற்காக **சான்ஸ்** சிறப்பு விழிப்புணர்வு அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து திருச்சி சிறுகாம்பூர் அரசு ஆரம்ப நிலையத்தின் மருத்துவர் டாக்டர் வல்லவராஜன் வலியுறுத்தினார்.

**வாய்ஸ்**

*************

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக ராமநாதபுரம் தென்காசி தூத்துக்குடி திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை மறுநாள் முதல் 2 நாட்களுக்கு டெல்டா மாவட்டங்கள் மற்றும் உள்மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

*************

**பேட்மிண்டன்**

ஜப்பானில் நடைபெறும் Kumamoto Masters பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் லக்ஷ்யா சென் முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்றில் அவர் ஜப்பானின் **Koki Watanabe**-ஐ 21-12 21-16 என்ற நேர் செட்களில் வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் H.S. பிரணாய் – மலேசியாவின் **Jun Hao Leong**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

*************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**